

ராயல்

சுதர்சன்

சின்னப்பா - கண்ணாம்பா - லலிதா - பாலையா - யோகமங்களம்

RAYAL TALKIE DISTRIBUTORS

MADURAI - VIJAYAVADA - BANGALORE.

BHARAT STUDIO

Copyright Reserved

Price 0-1-6

நடிகர்கள்

P. U. சின்னப்பா	...	முராரி
T. S. பாலையா	...	குண்டு ராம் என்ற குண்டு செட்டி
D. பாலசுப்ரமணியம்	...	அரசர்
P. B. ரங்காச்சாரி	...	பிரம்மானந்த மகரிஷி
B. ராஜகோபாலய்யர்	...	மாதவ்ஜீ
N. சங்கரமூர்த்தி	...	ராதாஜீ
T. V. ராதாகிருஷ்ணன்	...	லாலியின் சகோதரன்
C. P கிட்டான்	...	கட்மல்
K. சாயிராமன்	...	ஒன்டே
மாஸ்டர் A. L. ராகவன்	...	கண்ணன்
M. M. மருதப்பா	...	சிறுத்தொண்டர்
V. V. S. மணி	...	பரமசிவன்

மற்றும் பலர்.

நடிகைகள்

P. கண்ணாம்பா	...	...	துளசி
லலிதா ...	...	...	லாலி என்ற லீலாவதி
யோகமங்களம்	...	...	ஊர்மிளா
சுந்தரி ...	...	...	சிறுத்தொண்டர் மனைவி

C. K. சரஸ்வதி
C. K. நிர்மலா
சாந்தகுமாரி
பேபி லில்லி
முதலியோர்.

மதுரை

ராயல் டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

தயாரித்த

ராயல்

"சுதர்ஸன்"

RAYAL TALKIE DISTRIBUTORS

கதை, வசனம்	....	இளங்கோவன் A. S. A. சாமி
பாடல்கள்	....	பாபநாசம்சிவன் K. D. சந்தானம்
இசை அமைப்பு	....	G. ராமநாதன்
குரல் இசை	....	P. A. பெரியநாயகி
வாத்திய இசை	....	Free India வாத்தியக் குழுவினர்
நடனம்	....	கலாமண்டலம் மாதவன் ஹிராலால்
ஒளிப்பதிவு	....	P. ராமசாமி P. L. ராய் B. N. கொண்டா ரெட்டி
உதவி	....	P. வெங்கடாசலம்

ஒலிப்பதிவு	M. D. ராஜாராம் K. ராமச்சந்திர ஐயர்
உதவி	P. கோவிந்த நாயர் N. சுப்பாராவ் N. பழநியப்பன்
லாபரட்டரி	C. A. சுந்தர ராஜ் விஜயா லாபரட்டரி
உதவி	M. சுப்பிரமணியம்
எடிட்டிங்	சுந்தர்ராவ் நட்கர்ணி V. S. ராஜன்
உதவி	K. துரை ராஜ்
ஆர்ட் டைரக்ஷன் ..	K. மாதவன் சாந்தாராம்
செட்டிங்ஸ்	குட்டியப்பு சௌதரி
சித்திரக்காரர்	V. S. ராவ்
மோல்டிங்	M. P. கோவிந்தஸ்வாமி
மேக் அப்	ஹரிபாபு முகுந்த குமார் சங்கர் ராவ் நிபாட்கர் K. R. ராகவன் கோபால் ராவ்
உதவி	A. பெரிய சாமி S. R. சுடலை

புரடக்ஷன் கவனிப்பு	**V. S.** ராஜாராம் **G.** மணி
உதவி	**T. R. S.** மணி
ஸ்டுடியோ	*சென்ட்ரல்* (கோவை) லெஸீஸ் ஜுபிடர் பிக்சர்ஸ் *வாஹினி* (சென்னை) லெஸீஸ் விஜயா புரடக்ஷன்ஸ்

உதவி டைரக்ஷன்

P. வெங்கடாசலம்

K. கோபால கிருஷ்ணன்

A. நாகராஜன்

டைரக்ஷன்

சுந்தர் ராவ் நட்கர்ணி

A. S. A. சாமி

"சுதர்ஸன்"

திரைக்கதை

முராரி பாண்டங்கள் செய்து விற்பவர் பக்தி இல்லாதவர்.

துளசி, முராரியின் மனைவி, பதிபக்தியும், தெய்வ பக்தியும் உடையவள்.

குண்டு செட்டி, அவர்கள் உறவினன், உருட்டும், புரட்டும் கொண்ட உலுத்தன் துளசியை மணக்க விரும்புகிறான்.

துன்மார்க்கனை குண்டு செட்டிக்கு பெண்தர மறுத்து விடுகிறார், துளசியின் தந்தை மாதவன்.

குண்டு செட்டியின் கையிலே சில திருட்டு நகைகள் சிக்குகின்றன. அத்துடன் அவனும் அந்த ஊரை விட்டு மறைந்து விடுகிறான்.

பல வருடங்களுக்குப் பின்னர்.........

திருட்டு நகையுடன் மறைந்த குண்டு செட்டி பெருத்த வட்டி வியாபாரியாக ஊர் திரும்புகிறான். இப்பொழுது அவன் குண்டுராம்.

அவன், முராரி—துளசி இருவரின் பாண்ட வியாபாரத் திற்குப் பணம் கொடுக்கிறான். பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க வொட்டாதபடி, கையாட்களைக் கொண்டு அவர்

களுக்குப் பல கஷ்டங்கள் கொடுக்கிறான். இவ்வாறாக, குண்டுராம் துளசியைத் தனக்குக் கொடுக்காததினால் பழி வாங்கிவருகிறான்.

லீலா ஓர் இளம் பிச்சைக்காரி குண்டுராமின் அட்டூழியங்களைக் கண்டு, அவனைச் சீர்திருத்த நினைக்கிறாள். அதற்காக நடனக்கலை பயின்று, நாடோறும் சுற்றி வந்து, நல்ல புகழடைந்து திரும்புகிறாள்.

குண்டு செட்டி, குண்டுராம் ஆனது போல, லீலாவும் லாலியாக மாறிக் கொள்கிறாள்.

குண்டுராம், முராரி-துளசியையும், லாலி குண்டுராமையும் பழி வாங்க நினைக்கின்றனர்.

துளசி, கர்ப்பவதி யாகிறாள்.

சந்தையில் பாண்டம் விற்பதற்காக வண்டி கொண்டு செல்லும் துளசி, குண்டுராமின் கையாட்களால் தாக்கிக் கவிழ்க்கப்பட்டு, அபாயகரமான நிலையில், அங்கு தோன்றிய பிரம்மானந்த சுவாமிகள் என்னும் ஒரு மகரிஷியால் காப்பாற்றப்படுகிறாள். அவரே துளசிக்கு சுகப் பிரசவமும், முராரிக்கு தெய்வ பக்தியும் அருளி, பிறக்கும் குழந்தைக்கு "சுதர்ஸன்" என்று பெயர் சூட்டும்படி சொல்லி மறைகிறார்.

அதன்படியே துளசியின் மகனுக்கு "சுதர்ஸன்" என்று பெயரிட்டு வளர்த்து வருகின்றனர்.

பிறந்த மகன் "சுதர்ஸன்" நினைவினால், துளசிக்கு அதை அருளிய கடவுளிடம் பக்தி குறைந்து விட்டது.

முராரி பக்திமானானது முதல், பஜனையே அவர் பகல் இரவு வேலையாகி விட்டது. தொழிலில் நாட்டம் இல்லாதது கண்ட துளசி, தொணதொணக்க வாரம்பிக்கிறாள் முராரியை.

அன்று, துளசி வீட்டில் இல்லை. முதிர்ந்த பக்திப் பரவசத்துடன் களிமண் மிதித்துக் கொண்டிருக்கும் முராரி, தன்

மகன் "சுதர்ஸன்" காலுக்கிடையே மண்ணோடு அகப்பட்டதையும் அறியாமல் மிதித்துச் சிதைத்து விடுகிறார்.

இதை அறிந்த துளசி இடி முழக்கம் செய்கிறாள், பாண்டு ரங்கன் விக்ரகத்தைப் பல துண்டுகளாக நொறுக்கி விடுவதாக கர்ஜனை செய்கிறாள்.

விக்ரகத்தை நொறுக்கப் போனகையை 'கோடரி' யால் கொத்திவிட முராரி துணியவே, அவர் வணங்கி வந்த பாண்டு ரங்கன் மீது ஆணையிட்டு தன்னைத் தொடக் கூடாது என்று கூறுகிறாள் துளசி.

இதை வேறு விதமாக அர்த்தம் செய்து கொண்ட முராரி, அன்று முதல் துளசியைத் தீண்டுவதில்லை என்று பாண்டு ரங்கன் மீது ஆணை செய்கிறார். அப்படியே நடந்தும் வருகிறார்.

சந்ததியற்று விடக்கூடாதென்ற வருத்தத்தால், தன் தங்கை ஊர்மிளாவையாவது மணம் செய்து வைக்க நினைக்கிறாள் துளசி, அப்படியே முராரியும் ஊர்மிளாவை மணக்கிறார்.

துளசியிடம் நடந்து கொள்வது போலவே, ஊர்மிளாவிடமும் நடந்து கொள்ள வேண்டுமாய் மாமனார் கேட்டுக் கொள்கிறார். அதையும் வேறு விதமாக அர்த்தம் செய்து கொண்ட முராரி, துளசியைத் தொடாமல் இருப்பது போலவே ஊர்மிளாவையும் தீண்டாமல் இருந்து வருகிறார்.

துளசியும் ஊர்மிளாவும் இதற்கோர் உபாயம் செய்கின்றனர். அதன்படி ஓர் நாள் பெரும் மழையின் போது வீட்டினுள் சென்று, முராரியின் பக்கத்தில் படுத்து, அவரது இருகரங்களையும் தங்கள் மீது போட்டுக் கொள்கின்றனர்.

காலையில் எழுந்த, முராரி, பாண்டு ரங்கனுக்கு அபசாரம் செய்த தன் இரு கரங்களையும் வெட்டிக் கொள்கிறார்.

கரங்களை இழந்த பாண்டு ரங்க பக்தன் முராரிக்கு 'கண்ணன்' என்ற ஒருவன் வேலைக்காரனாக இருந்து வருகிறான்.

குண்டுராம் தனக்குத்தர வேண்டிய கடனுக்காக, முராரியை அரசன்முன் நிறுத்துகிறான். கண்ணனே முராரிக்காக வழக்காடி ஜெயிக்கிறான். அதுசமயம் ஆலயத்தில் விக்ரகத்தைக்காணவில்லையென்று அர்ச்சகர்கள் ஓடிவருகின்றனர்.

குண்டுராமின் கொடுமைகளைக் கண்ட, லாலி, குண்டுராமை ஒடுக்கிவிட உறுதி கொள்கிறாள். அதற்கான ஒரு வழியும் காண்கிறாள். அதன்படி "நீங்கள் தான் ஊர்மிளாவை மணக்கப்போகின்றீர்களே.! நான் இனி இங்கிருப்பது நல்லதல்ல, ஆதலால் வேறு ஊருக்கு நாட்டிய ஆசிரியையாக வேலை பார்க்கப் போகிறேன்." என்று கூறி அதற்காக தான் எழுதிவைத்திருக்கும் "நற்சாட்சிப் பத்திரங்களில்" கையொப்பமிடுமாறு சொல்கிறாள். குண்டுராம் கையெழுத்திடும் சமயம் அவனுக்குத் தெரியாமல் பத்திரத்தை மாற்றி விடுகிறாள். அதிலே குண்டுராமும் கையொப்பம் போட்டு விடுகிறான்.

மாற்றப் பட்ட பத்திரத்தில் இருந்ததென்ன.........?

அதனால் குண்டுராமுக்கு ஏற்பட்டது யாது.........?

முராரிக்காக வழக்காடிய 'கண்ணன்' யார்.........?

மறைந்த விக்ரகம் எங்கே இருந்தது.........?

விளக்கம், வெள்ளித் திரையிலே,

——— நலம் ———

முராரி-துளசி

ராகம் : ஸிந்து பைரவி   தாளம் : ஆதி

சுயமுயற்சியாலே வாழலாம்
புவியில் அமரவாழ்வு—பொய்
கொலை களவு கட்காம மெனும்—மா
பாதக வினைவகலும்

சோம்பல் கொண்டு புவிச்சுமையாய்—கணப்
பொழுது கழிக்க மாட்டோம்
சுழலும் திகிரியில் விதம் விதமாய்ப்
பதுமைகளும் ச்ருஷ்டி செய்வோம்.

தொகையரு

பலவகை வடிவுள்ள உயிர்களைப்
படைப்பான் பங்கஜ மலரோன்
உலகினிற்கு தவியாய் பல்வகைப்
பாண்டங்கள் நான் சமைப்பேன்

ராகம் : பிலஹரி   தாளம் : திஸ்ரம்

தொழிலை மறந்தால் நாடுநலம் குலையாதோ—குலத்
தொழிலல்லவோ நாடு செழிக்க சக்தி தருவது—கைத்
தொழிலல்லவோ மனிதவாழ்வில் இன்பம் தருவது—
குடிசைத்
தொழிலல்லவோ சுதந்தரம் தன் மதிப்பும் தருவது.

லீலாவதி

கஜல் : ராகமாலிகை

சந்தை கூட்டமடா

உலகமே சந்தைக் கூட்டமடா—இதில்
உலவிடும் மனிதரிலே நல்லோர் பொல்லார்
இருவகையாம் குணமுடையோர்
வருவார் போவார்—அது போல

பாட்டு.

பாரிதோ சந்தைக் கூட்டம்
பலவகை மனிதர் நடமாட்டம்
ஏர்பிடித்து தினம் பாடுபட்டு உடல்
இளைக்கிறான் ஒருவன்—அவன்
வேர்வை சிந்தி விளையும் சுகத்திலே
திளைக்கிறான் ஒருவன்

(பாரிதோ)

கைமுதல் இல்லாததாலே—கடன்
வாங்குகிறான் வட்டிமேலே

நம்பியே உடல் வெம்பும் வெயிலில்
செய்கிறான் ஒருவன்பேரம்—என்ன

செய்தும் இல்லையே சாரம்
வாங்கிய கடனைத்தந்தது போக

வட்டி நஷ்டமாச்சு—கடன்சுமை
வளர்ந்திட வழியாச்சு

வட்டி வாங்கியே லாபம் சேர்ப்பவன்
வாழ்வு உயரலாச்சு

வாழநினைக்கு தொரு கூட்டம்—அதை
வாட்டி வதைக்கு தொரு கூட்டம்

(பாரிதோ)

லாலி

ராக மாலிகை :

உனைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ
கலி காலத்திலே கண் கண்ட தெய்வமே (உனை)

ஞாலத்திலே நீசெய்யும் ஜாலத்திலே உன்
ப்ரதாபத்திலே லீலா விநோதத்திலே (உனை)

பணமே—உனக்கு நிகர் பார்தனில் ஏது
பார்த்து நீ மனம் வைத்தால் ஏது நடவாது

மூட்டாளும் உன்னால் கலைஞன் போலே பேசுவான்
சும்மா தொட்டால் நடுங்கும் கோழை கூடவாய்
வீசுவான்

பட்டப்பகலில் கொள்ளை அடிக்கும் பக்காத் திருடனும்
உன் பார்வையினால் பரமயோக்யன் போலே
காணுவான்

கெட்டலையும் சத்திரத்துச் சோம்பேறி கூட
உன் கிருபையினால் பெரிய மனிதனாகி விடுகிறான்

எல்லாம்—உனது மகிமையினாலே—நடக்குதப்பா
இணையில்லாத மகாநுபாவா

அறியாமை பொறாமை—பிறரை
அடக்கியாளும் தன்மை - கண்

தெரியாமை—உண்மை புரியாமை
கர்வம் குறையாமை—நிலை உணராமை

இந்த தீமை எல்லாம் நீ செய்திடும் நன்மை
எங்கும் நிறைந்தவனே—பணமெனும் ஏகாதி பத்தியனே

மனதைமயக்கும் மாயாஜாலத்தைக் கைவிட்டு
மம்தை கொள்ளாமல் நான் சொல்வதை நீ கேட்டு

நல்ல மனிதரிடம் நாடு—அதனுல்
நாடு செழித்து நலம் பெறக்கூடும்

வல்லவன் நீ ஆனதாலே—உலகில்
எல்லோர்க்கும் பொதுவாய் இருந்தால்—பணமே
(உனக்கண்டு)

மஹாரிஷி

ஹிந்துஸ்தான் ப்யாக் தாளம் ஆதி.

பல்லவி

பாண்டுரங்க நாமம்—பஜிமனமே
பவநோய் தீர்க்கும் மருந்திதுவே (பாண்டு)

அநுபல்லவி

எமபயம் நீக்கி இன்பந்தருமே
எல்லோர்க்கும் எளிது சுவைமிகுந்த
(பாண்டுரங்க)

தொகையரு.

மண்ணுலகில் பிறந்து பிறந்துழலாமல்
மானிடப்பிறவி பழுதாகாமல்
(பாண்டுரங்க)

முராரி

ராகம்: மாண்டு தாளம்: ஆதி.

உன்னடியில் அன்புவைத்தேன் ...கண்ணபரமாத்மா
உலகெல்லாம் நீயே எந்தன் ...கண்ணபரமாத்மா

வண்ணமலர்ச் சோலையிலே ...கண்ணபரமாத்மா
வருகுது உன் இன்பமனம் ...கண்ணபரமாத்மா

காற்றினிலும் பூங்குழலே ...கண்ணபரமாத்மா
காதில் வந்து கொஞ்சுதப்பா ...கண்ணபரமாத்மா

ஆற்றினிலும் வேத வொலி ...கண்ணபரமாத்மா
ஆத்மசுகம் பேசுதப்பா ...கண்ணபரமாத்மா

கண்ணபரமாத்மா, கண்ணபரமாத்மா, கண்ணபரமாத்மா

முராரி-துளசி

ராகம் : முகாரி　　　　தாளம் : ஆதி

முராரி :— உலகமெல்லாம் பாண்டுரங்கன் குழந்தைகள்
உனக்கேன் வீண் கவலை

துளசி :— கவலை இல்லாதவர்க்கு பெண்டாட்டி
பிள்ளையேன் காஷாயம் அணியலாமே

ராகம் : சுத்தசாவேரி　　　　தாளம் : ஆதி

முராரி :— காஷாய வேஷத்தைக்கண்டால் மயங்கிடுவனோ
விட்டலன் என்றெண்ணமோ பேதாய்

துளசி :— உங்கள் கபட வேதாந்தத்தைக் கேட்டால்—
உலகம் கை கொட்டிச் சிரிக்காதோ

ராகம் : பந்துவராளி　　　　தாளம் : ஆதி

முராரி :— உலகு சிரித்தாலும் உண்மைக்கு அழிவுண்டோ
உயர்தெய்வம் என்றன் விடோபா

துளசி :— அவர் உங்கள் பசிதீர்ப்பார் பானை சட்டி
சமைப்பார் அசையாமல் அமர்ந்திருங்கள்
நீங்கள் அசையாமல் அமர்ந்திருங்கள்

முராரி

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

திருச்செங்காட்டான் குடிதனிலே
சிறுத்தொண்டனென்ற ஒரு பெரியார்—சிவ
பக்தியில் சிறந்த சீலர்—செய்த
புண்ணியமே ஒரு ஆண் குழந்தையாய்—வந்து
பிறந்தது தந்தையுடன் தாய்
அழகுகண்டு களிப்பார்—அதன்
அழகுகண்டு களிப்பார்—அடங்காத
ஆனந்தக் கடல் குளிப்பார்

ராகம் : சுத்தசாவேரி தாளம் : ஆதி

கண்ணிலும் அருமையாய்ச் சீராட்டினார்
கருத்தில் ஐயன் அருளைப்பாராட்டினார்
உள்நிறை அன்புடன் பாலூட்டினாள்
உவகையுடன் தொட்டிலில் தாலாட்டினாள்
வளர்பிறை போல் சீராளன் வளர்ந்து வந்தான்
இளம்பிறை வேணியன் உளம்தனிலே
தளர்வில் அடியார் அன்பைச் சோதனை செய்ய
தளர் நடைக்கிழக் கோலம் தாங்கி வந்தான்

நாமாவளி

அரஹர சிவசிவ மஹா தேவா

அருள் அமுதம் தர வா வா

ராகம் : புன்னாக வராளி : தாளம் ஆதி.

ஒரு பரதேசிக்குணவு கொடுப்பார் உண்டோ—ஐயா
அடிமை இவ்வேழைக் குடிசை இதே
வந்தருள்வீர்—சுவாமி

பன்னெடு நாளாய் என்னொரு விரதம் கேளீர்—ஐயா
பக்குவ வயதில் உமக்கொரே பிள்ளை உண்டோ
—ஐயா

அன்னை தந்தை இருவர் மகிழ்ந்து அன்புடனே அளிக்கும்
உயர்ச்—சுவைமிகு பிள்ளைக்கறியமுதல்லால்
உண்ணேம்—ஐயா

பிறவி எடுத்தபயனும் அடைந்தேன் இன்றே—சுவாமி
இருவருமாகத்தனயனை நாறு துண்டாக்கியே

கறியும் சமைத்த அதிசயம் ஆச்சோ என்சொல்லு வேன்
அதிசயமாச்சோ என்சொல்லுவேன்

ஓம் நமச்சிவாய ஓம் நமச்சிவாய

ஓம் நமச்சிவாய ஓம் நமச்சிவாய

ஓம் நமச்சிவாய ஓம் நமச்சிவாய

லாலீ

ஹிந்துஸ்தானி வர்ணமெட்டு

தொடாதீங்க—என்னைத்
தொடாதீங்க—ஐயய்யய்ய
தொடாதீங்க
தொடாதீங்க தொடாதீங்க தொடாதீங்க
தூரப்போங்க இது நேரமில்லிங்க
அவசரப்பட்டா காரியம்
ஆகுமா கூடுமா ஞாயமா (தொடாதீங்க)

எதிலும் நிதானம் வேணுங்க
அது இல்லே எண்ணு கஷ்டம் தானுங்க—ஒங்க
மனசு போலவே நடக்கப் போகுது
கடைசி வரைக்கும் பொறுங்க
அதுக்குள்ளே (தொடாதீங்க)

வேளைநாழி வரணும்—ஒங்க
காலமும் நெருங்கி வரணும்
நாலு பேரறிய மேளதாளத் தோடே
நடக்கணும் கல்யாணம்—அப்போதான்
ஞாயமாகத்தோணும்—பின்னாலே
நடக்கப் போறதை முன்னாலே செய்தா
நமக்குத்தாங்க அவமானம் (தொடாதீங்க)

துளசி

ராகம்: அடாணா **தாளம் ஆதி**

கண் என்பேனோ கண்ணின்மணி என்பேனோ என்
கற்கண்டென்பேனோ கட்டிக்கரும்பென்பேனோ

ராகம்: நடபைரவி **தாளம் ஆதி**

என் செல்வமே இங்கே ஓடிவா
இள நகையுடன் என்எதிரே ஆடவா

ராகம்: ஆபோகி தாளம்: திஸ்ரம்

அமுதுண்ணவா எனக்கொரு
முத்தம் கொடுக்கவா

ஆராரோ ஆரிரரோ

முராரி

ஹிந்துஸ்தான் வர்ணமெட்டு

ஸ்ரீதாமோதரா ஜெய ஸ்ரீதரா
ஜெய ஸ்ரீதரா கருணாகரா—முரளீதரா (தாமோ)
ஞானிகள்த்தியான மோன நன்னிலையில்
காணும் நின் மகிமை நானறிவேனோ (தாமோ)

முராரி

ராகம்: ஸிந்துபைரவி தாளம் ஆதி

என்ன செய்தாய் அப்பா—என்ன செய்தாய்
என்ன செய்தாய் என் அப்பா என்ன செய்தாய்

என் அரும் விட்டோபா நீ என்ன செய்தாய்
நீயே எனக்கு அமுதூட்ட வந்தாயோ

நானடியேன் அறியேன் மாயவனே—நீ (என்ன)

உனைக்காணு துறங்குவேனோ—ரங்க—உனைக்
காணு துறங்குவேனோ—ரங்க—
அரைக்கணமும் உயிர் வாழ்வேனோ—ரங்க—உனைக்
காணு துறங்குவேனோ.

பாண்டு ரங்க விட்டல ரகுமாயி
பாண்டு ரங்க விட்டல ரகுமாயி
பாண்டு ரங்க விட்டல ரகுமாயி.

விட்டல ரகுமாயி விட்டல ரகுமாயி
விட்டல் விட்டல் விட்டல் விட்டல்

The All India Printing Works, 65, Thambu Chetty St., Madras-1.

RAYAL TALKIE
DISTRIBUTORS
MADURAI

எமது படங்கள்

ஹரிதாஸ்

சாவித்திரி

சகுந்தலை

சாந்த சக்குபாய்

சிந்தாமணி

பாமா பரிணயம்

ராயல் டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

மதுரை, விஜயவாடா, பெங்களூர்.

எங்கும் வெற்றி!

ராயல்

சுதர்ஸன்

(தமிழ்)

RAYAL TALKIE DISTRIBUTORS MADURAI

BHARAT
STUDIO

விலை 1/2 அணா